1978 மார்ச் 28]

பருத்திக்கோட்டைக் கிராமத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

*685 வினா— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா:

(அ) மன்னார்குடி தாலுக்கா 145 பருத்திக்கோட்டை கிராமத்தில் எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டியது உள்ளது?

(ஆ) மின் இணைப்பு கொடுக்கப்படாமைக்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மன்னார்குடி, பருத்திக்கோட்டை கிராமத்தில் ஏழு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) அரசு தயாரித்துள்ள முன்னுரிமை கொள்கைப்படி மின் இணைப்புகள் வழங்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதை விரைவாக அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதோடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்டர்கள் சேதம் அடைந்ததற்கு 50 ரூபாய் ரிப்பேர் செலவுக்காக வசூலிக்கப்படுகிறது. வாடகைக்கு அமைக்கப்பட்டிருக்கிற மீட்டர்களில் ரிப்பேர் ஏற்படுமானால் அதற்கு மின்சார வாரியம் தான் செலவிட வேண்டும், எப்படி பஸ்ஸிலே ரிப்பேர் வருமானால் அதிலே பயணம் செய்கின்ற பயணிகள் அதற்காக செலவிடுவது இல்லையோ அதைப்போன்று அந்த ரிப்பேர் செலவை மின்சார வாரியமே ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மீட்டர் ரிப்பேர் பற்றிய விவரம் என்னிடத்தில் தற்பொழுது இல்லை. இது மின்னிணைப்பு பற்றிய கேள்வி. 75 கிணறுகளில் ஏற்கெனவே 40 கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 35 கிணறுகளில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி 8 விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் ஒரு கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கும் பணி நடைபெறுகிறது. மற்ற 7 விண்ணப்பங்களும், தற்போது அரசு தயாரித்துள்ள முன்னுரிமைப் பட்டியலின்படி கடைசி இனத்தைச் சார்ந்தவை யாதலால் மாநில அளவில் உள்ள சுமார் 80,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்ட பின்னர்தான் இந்த பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்க இயலும்.

[1978 மார்ச் 28

திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிட்டதைப் போல தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இதைப்போன்ற மின் இணைப்புக் கொடுப்பதில் மிக அதிக அளவில் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதற்குரிய காரணம் நிலத்தடி நீர் என்று சொல் கிறார்கள். தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்து எல்லா இடங்களுக்கும் இந்த மின்னிணைப்பு தருவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காரணம் அது மட்டுமல்ல. நம்மிடத்திலே இருக்கின்ற மனுக்கள் இரண்டேகால் இலட்சம். ஆண்டு ஒன்றுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 25,000 இலிருந்து 35,000 வரை. ஆகவே, இருக்கின்ற மனுக்களுக்கே இன்னும் ஏழெட்டு ஆண்டுகளுக்கு வேலை இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மின்னிணைப்பு கொடுக்கும்பொழுது அரசு என்ன நடைமுறைகளைக் கடைப் பிடித்து மின்னிணைப்பு கொடுக்கிறது. இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் இருப்பதாகக் கூறினார்கள். அப்படியென்றால் சிறு நில விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா ? ஏற்கெனவே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டவர்களுக்கும் மீண்டும் கொடுக்காமல் புதியதாக மனுச் செய்பவர்களுக்குக் கொடுக்கக் கூடிய முறையைக் கடைப்பிடிக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் வாரியத்தினால் சேங்ஷன் செய்யப்பட்ட மனுக்கள் ஏற்கனவே நிறைய இருக்கின்றன. ஆகையினாலே சேங்ஷன் செய்யப்பட்ட திட்டங்களுக்கு இப்பொழுது மின்சாரம் வழங்கப்படுகிறது. சிறு விவசாயிகளுக்கு அதிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம்.

*686.வினா. — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர்களாக பணிபுரியும் நிலையில் பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றும் உரிய பதவியுயர்வு கிடைக்காத நிலையில் அவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவது போல் தமிழில் பட்டம் பெற்றவர் களுக்கும் ஊக்க ஊதியம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ., பட்டம் மட்டும் பெற்றால் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை. அவ்வாசிரியர்கள் பி.ஏ., பட்டம்